

தஞ்சை வடக்கு மாவட்ட தி. மு. க சார்பில் முத்தமிழறிஞர், பன்முகத் தலைவர் கலைஞர் அவர்களின்102 வது பிறந்த நாளை முன்னிட்டு கும்பகோணம் வளையப்பேட்டையில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ. இராமலிங்கம், மு.சண்முகம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் கா.நசீர் முகமது, கோவி. அய்யாராசு, சாஸ்தா நடராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தட்சிணாமூர்த்தி, ஆடுதுறை மு.உத்ராபதி உள்ளிட்ட ஒன்றியப் பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.முருகமணி மற்றும் பலர் உள்ளனர்.

# கடலூரில் கலைஞர் பிறந்தநாள் விழா!

கடலூர், ஜூன் 4-

முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு,கடலூர் மாநகர கழகம் சார்பில், கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் தலைமையில்,

கடலூர் உழவர் சந்தையிலிருந்து அமைதி பேரணியாக சென்று, கடலூர் மாநகர கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலித்தப் பட்டது. முன்னதாக கடலூர் உழவர் சந்தையில், 700 நபர்களுக்கு காய்கறிகள் மற்றும் புடவைகள், வேட்டிகள், உணவு, மரக்கன்றுகளை எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் ,இள. புகழேந்தி ,மாநகர கழக செயலாளர் கே.எஸ். ராஜா, மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர் பி.சுப்பரமணயன், பொதுக் குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன் ,மாநகர கழக அவைத்தலைவர் பி.பழனி வேல்,உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,சார்பு அணி நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் கலைஞர் பிறந்தநாள் விழா!

திருப்பத்தூர், ஜீன் 4-

செம்மொழி நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நன்னாளில் திருப்பத்தூர் தொகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடைகள் அங்கன்வாடி மையம் திறப்பு விழா கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கிய நிகழ்ச்சி

ஜீன்03 முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி திருப்பத்தூர் ஒன்றியத்தில் கழகத்தின் இரு வண்ணக் கொடியேற்றி இனிப்புகளுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

ஆகிய பகுதிகளில் புதிய

செம்மொழி நாளான இன்று திருப்பத்தூர் ஒன்றியம் அகரம் வவ்வால் தோப்பு, ஏ.கே.மோட்டூர் எம்.ஜி.ஆர்.நகர், கதிரம்பட்டி கோனேரிகுப்பம் பகுதிநேர நியாயவிலைக்கடைகள், அங்கன்வாடி மைய கட்டிடம் ஆகியவைகளை சட்டமன்ற உறுப்பினர் A.நல்லதம்பி MLA அவர்கள் திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக பொறுப்பாளர் எம்.ராஜேந்திரன், ஒன்றிய சேர்மென். விஜயா அருணாசலம், துணை சேர்மென். டி.ஆர்.ஞானசேகரன் , வட்ட வழங்கல் அலுவலர்.எஸ். முரளி, கூட்டுறவு சி.எஸ்.ஆர்.தர்மேந்திரன், கூட்டுறவு செயலாளர். அண்ணாதுரை, வட்டார குழந்தைகள் நல ஒருங்கிணைப்பாளர். செல்வி, மாவட்ட கவுன்சிலர். இரா.சுபாஷ்சந்திரபோஸ், ஊராட்சி மன்ற தலைவர்கள். சரஸ்வதிஜெயகுமார்,வேலு ஒன்றிய கவுன்சிலர்கள். கலைவாணிசெல்வராஜ், ஆர்.ராமலிங்கம், அவைத்தலைவர். சி. சின்னதம்பி, மாவட்டபிரநிதிகள். எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், வி.அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ‘நூலகங்கள் உருவாக்கி வாசிப்பை வளர்க்கும் இயக்கம்’ சேப்பாக்கம் -திருவல்லிக்கேணியில் மாணவர் வாசகர் சந்திப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கோடை விடுமுறையைப் பயனுள்ளதாக்கும் வகையில் கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 02-06-2025 அன்று 115 (அ) வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர்



அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் மு.மு.முஸ்தக் கலந்து கொண்டு, நூலகத்தின் அவசியம் குறித்து மாணவர்களிடையே பேசினார். “எப்போது கழகம் ஆட்சிக்கு வந்தாலும் நூலகங்கள் மீது தனிக்கவனம் செலுத்தும். பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் கோட்டூர்புரத்தில் நூலகம் அமைத்தார். தற்போது அவரது நூற்றாண்டில் திராவிட மாடல் நாயகர் மதுரையில் நூலகம் அமைத்துள்ளார். அதே போல இளைஞர் அணி செயலாளர் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் நூலகம் அமைத்து வருகிறார். ஏனெனில் எழுதி வளர்ந்த இயக்கம் நமது இயக்கம். வாசிப்பின் முக்கியத்துவம் மற்றெந்த இயக்கத்தையும் விட நமக்கு நன்றாகத் தெரியும். நமது தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமி ழறிஞர் கலைஞரை வாசியுங்கள். குறிப்பாக, பெரியார் எழுதிய ‘இனிவரும் உலகம்’, அண்ணா எழுதிய ‘ஆரிய மாயை’ போன்ற நூல்களை வாசியுங்கள்” என்று மாணவர்களிடம் பேசினார்.

வருகை தந்த மாணவர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘திராவிடப் போராளிகள்’, ‘இடம் பொருள் கலைஞர்’, ‘கலைஞர் இயக்கவியல்’ நூல்கள் வழங்கப்பட்டன.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் வி.தினேஷ் குமார், திருவல்லி க்கேணி பகுதி அமைப்பாளர் எம்.ஏ.சஜ்ஜாத், பகுதி துணை அமைப்பாளர்கள் புருஷோத்த மன், ஆர்.விக்னேஷ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஏ.விஜயகுமார் முன்னிலையில் மேட்டுப்பட்டி ஊராட்சியை சார்ந்த பாஜக ஒன்றிய தலைவர் பதவியில் இருந்து ஆர். லோகநாதன் அக்கட்சி இருந்து விலகி திராவிட முன்னேறக் கழகத்தில் இணைந்தார். அவருடன் சுரேஷ்குமார், பாலமுருகன், சரவணன், வீரன், ஸ்ரீரங்கன், பிரவீன், மணிகண்டன், பச்சையப்பன், புகழ் மணி, லோகேஷ், கௌதம் , அயோத்தியாப்பட்டிணம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாழப்பாடி உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வந்து பிறந்தநாள் முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், பேரூர் செயலாளர்கள் செல்வம், சுப்பிரமணி, மனோகரன், சோமசுந்தரம், முனைவர் அ.சீனிவாசன், முன்னாள் எம்எல்ஏ குணசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞரின்பிறந்தநாள்; காலத்தின்சிறந்தநாள்!

கொஞ்சுகிளிக் கூட்டமும்
குயில்களின் விருந்திசையும்
நஞ்சைவயல் தோட்டமும்
நல்லாற்றுப் பாய்ச்சலும்
மஞ்ஞைகளின் ஆட்டமும்
மலர்ப்பூங்கா மணக்காற்றும்
வஞ்சமின்றிப் பெருகிய
வளவனாம் சோழனாண்ட
நெஞ்செலாம் களிப்பூட்டும்
நீர்பெருகி ஊர்செழிக்கும்
தஞ்சைவள நன்னிலத்துத்
தண்பொழில் திருக்குவளை
அஞ்சுகத்தாய் முத்துவேலர்
அருந்தவப் பேற்றினால்
செஞ்சுருட்டிப் பண்போலத்
திக்கெட்டும் புகழ்பரவ,
துஞ்சிருள் போக்கிடச்
சுடர்தரும் சூரியனாய்
நெஞ்சினிக்கப் பிறந்தவர்நீர்;
நினைத்தபடி
சிறந்தவர் நீர்!

திருக்குவளை பிறந்தாலும்
தேராலே பேர்பெற்ற
திருவாரூர் வளர்ந்தவர்நீர்;
சென்னையில்
உயர்ந்தவர்நீர்!
அரும்பிளஞ் சிறுவயதில்
அஞ்சாமல் இந்தியை
ஆகாதென்று ஊர்வலம்
தெருத்தோறும்
சென்றவர்;
சிறுவரணி கண்டவர்!
கருதியது முடிக்கின்ற
கட்டுறுதி கொண்டவர்!
வருநாளில் போராடும்
வல்லமைக்குச் சான்றிந்தத்
திருவாரூர் பெருமுழக்கம்;
தீயாகித் தருங்கலக்கம்!

ஒருநாளும் தூங்காமல்
உழைக்கின்ற
உம்வழக்கம்
தருகின்ற உயர்வுக்குத்
தக்கதோர்
அடையாளம்!

திண்ணார்ந்த கலைஞரே!
திராவிடம் தமிழென
வெண்ணார்ந்த சங்கொலித்தீர்,
வெகுண்டெழும்
முரசொலித்தீர்!
நண்ணாரும் உவக்கும்உம்
நயத்தகு பேச்செழுத்தில்
பெண்ணாறும்
வைகையும்
பெருகியெழும் காவிரியின்
தண்ணீராய் வேட்கையைத்
தணித்தவர்நீர்;
இனித்தவர்நீர்!

அண்ணா ஊன்றிய
அரியதொரு விதையின்று
விண்ணாகப் பரவியே
விரிநிழல் தருகின்ற
கண்ணான இயக்கமாம்
கழகத்தை இன்றுவரை
மண்ணாள வைப்பவர்நீர்;
மாற்றாரை வென்றுவென்று
மண்ணாக்கி விட்டவர்நீர்;
மாமுகடு தொட்டவர்நீர்!
பிண்ணாக்காய் எதிரிகளைப்
பிழிந்தெடுத்து இட்டவர்நீர்;

அண்ணாந்து பார்த்தாலோ
அகல்வானம் போலவே
எந்நாளும் தெரிபவர்நீர்;
இளங்கதிரும் வளர்நிலவும்
விண்ணார்ந்து ஒளிர்தல்போல்
வியப்பாகத் திகழ்பவர்நீர்;
புண்ணூர்ந்த ஆரியப்
போலிகளை
வெளுத்தெடுத் துப்
பண்ணார்ந்த தமிழ்நாட்டில்
பகுத்தறிவு தன்மானம்
கண்ணார்ந்து விளங்கவே
கலைஞரே இறுதிவரை
எண்ணார்ந்து
வாழ்ந்தவர்நீர்,
எழுத்தார்ந்து
வளர்ந்தவர்நீர்!



பேரறிஞர் அண்ணாவின்
பெருந்திறல் தம்பியாய்,
சீர்திருத்தப் பெரியாரின்
திண்ணிய மாணவனாய்
பேராசிரியர் என்றும்
பெரிதுவக்கும் நண்பனாய்,
பேரியக்கக் கழகத்தைப்
பேணிவளர் தலைவராய்,
போராளி தளபதியின்
புகழ்மிகு தந்தையாய்,
தேரியக்கும் பாகனாய்,
செந்தமிழ் நாட்டுக்குப்
பார்மெச்சும் முதல்வராய்,
பராசக்தி முதலான
ஊர்போற்றும் படங்களின்
உரையாடல் சிற்பியாய்,
தார்மாலை எப்போதும்
தாங்கிடும் தோளனாய்,
நேரத்தைப் போற்றிடும்
நெடும்பணிச் செயலராய்,
ஆரியத்தை வீழ்த்தியே
ஆண்டபெரும் நாயகனாய்,
காரியத்தை நிறைவேற்றும்
கடமைமிகு வீரனாய்,
ஒருள்ளத் தயாளம்மை
உடனுறை கணவராய்
நீருள்ளீர் , நிலைபெற்றீர்,
நெடும்புகழ் மிகவுற்றீர்!

அடர்காட்டில் என்றுமே
அரசாளும் அரிமாநீர்,
தொடர்வானில் எங்கெங்கும்
சுடர்கின்ற சூரியன்நீர்;
கடல்நீரில் எழுகின்ற
கட்டற்ற பேரலைநீர்,
உடல்உயிர் அளிக்கின்ற
உரிமைப்போர் வீரர்நீர்,
இடர்வரின் கலங்காமல்
எதிர்கொள்ளும்
இமயம்நீர்,
கடமையே கண்ணென்றீர்
காலமோ பொன்னென்றீர்,
கடமையும்
கண்ணியமும்
கட்டுப்பாடு எனமூன்றும்
உடைமையென்ற
அண்ணாவின்
ஒப்பற்ற தம்பிநீர்!

பெண்ணீர்மை போற்றியே
பெரும்புரட்சி செய்தவர்நீர்;
கண்ணீரைப் போக்காத
கடமையைத் தூண்டாத
வெண்ணீறும்
திருமண்ணும்
வித்தகம் குறைப்பதனை
எண்ணீரோ,
உண்மைவழி
எழுவீரே என்றாலும்
அண்ணா பெரியாரை
அன்றாடம் நினைவூட்டித்
தொண்ணூறு தாண்டியும்
துவளாமல் தீட்டினீர்,
கண்ணற்ற மக்களுக்குக்
கருத்துவழி காட்டினீர்!

ஈரத்தைக் கொண்டவராய்
இதயங்கள் வென்றவராய்,
பாரத்தைச் சுமந்தவராய்,
பணிமுடிக்கும்
தொண்டராய்
வீரத்தின் துணையோடு
விளங்கிய வித்தகராய்,
சூரத்தின் சூழ்ச்சியரைத்
துண்டாடும் வேலராய்,
ஆரத்தை அணிந்தவர்நீர்;
முத்தமிழ் அறிஞர்நீர்!

சேரன்போல் செழியன்போல்
திசையாண்ட சோழன்போல்
கூரறிவால் பெருந்திறனால்
கோலோச்சிக் கொற்றவனாய்ப்
பேர்பெற்று விளங்கும்உம்
பிறந்தநாள் என்றென்றும்
சீர்பெற்றுத் திகழுமே,
திசையெலாம் புகழுமே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கடல்நீரோ வற்றாது,
கார்முகிலோ குறையாது,
தொடர்காற்றோ நீங்காது,
சுழல்புவியோ நில்லாது,
அடர்வானம் நெகிழாது,
அழல்தீயும் குளிராது,
சுடர்மீனும் வீழாது,
சூரியனும் மறையாது
படர்வயல் எழுகின்ற
பசுமையும் போகாது,
மடல்வாழை இயல்பென்றும்
வளர்ந்தாலும் மாறாது!

தடமிட்டுச் சென்றவரே,
தளபதியைத் தந்தவரே,
உடன்பிறப்பைக் கொண்டவரே,
உரிமைப்போர் கண்டவரே,
கடனென்றும் விண்டவரே,
கனித்தமிழ் உண்டவரே,
அடலேறாய் முன்னேறி
அயராது வென்றவரே,
கடல்வான்மண் காற்றுநீர்
காலமெலாம் நிலைப்பதுபோல்
தொடல்இல்லா உயரத்தில்
தொடர்ந்துநீர் விளங்குவீர்!

கலைஞரெனின்
உழைப்பென்று
காலந்தான் சொல்கிறது,
கலைஞரெனின் உறுதியென்று
காலந்தான் கரைகிறது,
கலைஞரெனின் உரிமையென்று
காலந்தான் உரைக்கிறது,
கலைஞரெனின் உயர்வென்று
காலந்தான் பகர்கிறது,
கலைஞரெனின்
கொள்கையென்று
காலந்தான் புகல்கிறது,
கலைஞரெனின்
வெல்கையென்று
காலந்தான் வியக்கிறது,
கலைஞரெனின்
தலைமையென்று
காலந்தான் புகழ்கிறது,
கலைஞரெனின் புலமையென்று
காலந்தான் புனைகிறது,
கலைஞரெனின் இளமையென்று
காலந்தான் நுவல்கிறது,
கலைஞரெனின்
புதுமையென்று
காலந்தான் களிக்கிறது,
கலைஞரெனின் விரைவென்று
காலந்தான் நவில்கிறது!

மலைகுலைந்து போனாலும்
மனங்குலையா உறுதியர்,
வலைபல விரித்தாலும்
மயங்காத உளத்தினர்,
இலைபல கிளைத்தாலும்
எதிர்கொள்ளும் உரத்தினர்,
அலையெழுந்து ஆர்த்தாலும்
அடக்கியெழும் உயர்வினர்,
கலைஞரின் பிறந்தநாள்
காலத்தின் சிறந்தநாள்!




சென்னை தெற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா. சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், திருமதி என்.வி.என் கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், வாசுகி பாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, துரை. கபிலன், சு.சேகர், பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் துரை. வீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் தடா ஒ.சுந்தரம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பத்மபிரியா, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஜெசிகா, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா. அன்பரசன், மின்னல் கந்தப்பன், ஆர். பாலசுந்தரம், அடையாறு பி.ஜே.பாஸ்கர், களக்காடி எல்லப்பன், பி.எஸ்.முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.